அருள் தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாய்



இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருகல்யாணத் தாயின் அன்பு பக்தர்களே! 'திருக்கல்யாணத் தாய்' இதழின் அன்பு வாசகர்களே! அனைவருக்கும் என் இனிய ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வணக்க மாதமாகிய மே மாதம் மாதாவின் அன்பும், அருளும் தங்களோடு இருந்து வழிநடத்த வாழ்த்துகிறேன்.திருக்கல்யாணத்தாய் பொற்பையில் கொலு கொண்டு அகில உலக பக்தர்களின் குறிப்பாக தன்னை நாடி வரும் பக்தர்களை கருணையோடு வழிநடத்துகிறார். திருக்கல்யாணத்தாய் மாத மலர் அன்னையின் புகழ்பரப்ப ஒரு அருட்கருவியாக அமைய அனைவரும் இணைந்து ஜெபிக்க அழைக்கிறேன். இந்த இதழ் அன்னை மரியாவின் வணக்க மாத இதழாக வெளிவருகிறது. உலகையெல்லாம் படைத்த இறைவனையே தம் வயிற்றில் தாங்கி பாலூட்டி சீராட்டி வளர்த்த நம் தேவ அன்னையின் புகழ்பாடும் மாதம் இது.

திருத்தலங்களுக்கு குடும்பத்தோடு சென்று திருயாத்திரை செய்யும் மாதம் இது. இந்த மாதம் முழுவதும் நாம் ஒன்று கூடி தேவ அன்னையை ஆராதிப்போம். உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகம் சென்று நம் அன்னை பரலோகத்தில் தம் மகனுக்கு அருகில் இருந்து நமக்காக பரிந்து பேசி நம் வேண்டுதல்களையெல்லாம் நிறைவேற்றி வருகிறார் அன்னை வழியாக நம் உள்ளத்தின் தாகங்களை இறைவனிடம் எடுத்துச் சொல்வோம். பொற்பைநகர் திருக்கல்யாண அன்னையின் புகழ், இன்று உலகெங்கும் பரவி மணம் வீசிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு முதல் சனிக்கிழமைகளிலும் அன்னையைத் தேடிவரும் பக்தர்கள் கூட்டம் பெருகிக் கொண்டே வருகிறது. அன்னையின் வழியாக பெற்றுக்கொண்ட நன்மைகளை எண்ணி நன்றி நிறைந்த உள்ளத்தோடு வரும் குடும்பங்களின் எண்ணக்கை கூடிக்கொண்டே போகிறது. இந்த மே மாதம் அன்னைக்குரிய சிறப்பு மாதமாக விளங்குவதால் நாம் அனைவரும் அன்னையிடம் ஊக்கத்தோடு மன்றாடுவோம்; வேண்டும் வரங்களை பெற்றுக் கொள்வோம். "அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என அன்னை கூறியபடி இறைவழி நடப்போம் வளம் பெற்று வாழ்வோம்

நமது திருக்கல்யாண மாதா ஆலயம், திருக்கல்யாணமாதா திருத்தலமாக அறிவிக்கப்பட்ட (12.5.2013) முதலாம் ஆண்டு நிறைவு நாளில் அன்னையின் ஆசீரை மேலும் நிரம்ப பெற்றிட உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்

**திருத்தல அதிபர்**

பொத்தக்காலன்விளை.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!



# உலகத் திருச்சபை

## ஒப்புரவு அருளடையாளத்தில் கடவுளின் கருணை வெளிப்படுகின்றது.

ஒப்புரவு அடையாளம் , தீர்ப்பு வழங்கும் நீதிமன்றம் அல்ல. மாறாக அது வானகத் தந்தையின் மன்னிப்பையும், கருணையையும் அனுபவித்ததாகும் என்று திருத்தந்தை பிரான்ஸிஸ் கூறினார். வத்திக்கான் பாவமன்னிப்புச் சலுகை நிறுவனம் நடத்திய பயிற்சியில் பங்குபெற்ற ஏறக்குறைய 600 பேரை சந்தித்து உறையாற்றிய திருத்தந்தை ஒப்புரவு அடையாளத்தை நிறைவேற்றுவதில் மையமாக செயல்படுபவர் தூய ஆவியானவர் என்பதால், இவ்வருள் அடையாளத்தை நிறைவேற்றும் அருள்பணியாளர்கள், தூய ஆவியின் மனிதர்கள் என்றும் கூறினார். ஒப்புரவு அருளடையாளத்தை பெறவரும் விசுவாசிகளை இவர்கள் நீதிபதியாக இல்லாமல், ஏன் சாதாரண மனிதனாகக்கூட இல்லாமல், கடவுளின் அன்போடு வரவேற்க வேண்டும் என்றும் இரு கூறுகள் பற்றி விளக்கிய திருத்தந்தை, ஒப்புரவு உயிர்த்த ஆண்டவரின் புதிய வாழ்வை வழங்கி திருமுழுக்கு அருளைப் புதுப்பிக்கின்றது என்பதால், இதனை நிறைவேற்றும் அருள்பணியாளர்கள் இதனை தாராள மனதுடன் பிறருக்கு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதற்கு விசுவாசிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் குறிப்பிட்ட திருத்தந்தை மன்னிப்பு மற்றும் மீட்பின் அருளடையாளத்தை வழங்குவதற்கு ஒவ்வொரு மறைமாவட்டமும், பங்குத்தளங்களும் மிகுந்த அக்கறை காட்டுமாறு வலியுறுத்தினார். விசுவாசிகள் ஒவ்வொரு பங்கிலும் இந்த அருளடையாளத்தைப் பெறுவதற்குரிய நேரத்தை அறிந்திருக்க வழிவகை செய்யுமாறும் திருத்தந்தை பரிந்துரைத்தார். வத்திக்கான் பாவமன்னிப்பு சலுகை நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் புதிய குருக்களுக்கு ஒப்புரவு அருளடையாளம் குறித்து பயிற்சி அளித்து வருகிறது.

## கிறிஸ்தவர்களின் கடவுள் காணாமல் போன தம் மகனுக்காக காத்திருக்கும் ஒரு தந்தை போன்றவர்

கடவுள் எப்போதும் மன்னிப்பவர். ஒவ்வொரு மனிதரும் தம்மிடம் திரும்பி வரும்போது அதனை அவர் கொண்டாடுகிறார் என்று கூறினார் திருத்தந்தை பிரான்ஸிஸ். இறைவாக்கினர் ஓசேயா புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட வாசகத்தை மையமாக வைத்து ஆற்றிய மறையுரையில் கடவுளின் கருணை பற்றி பேசினார் திருத்தந்தை பிரான்ஸிஸ். கடவுளுக்கு மன்னிப்பதை தவிர வேறு என்ன செய்வது எனத் தெரியாது என்றும் அவர் மன்னிக்கும் கடவுள், இரக்கத்தின் கடவுள், மன்னிப்பதில் சோர்வடையாத கடவுள், நம் அனைவருக்காகவும் எப்போதும் காத்திருக்கிறார் என்றும் கூறினார் திருத்தந்தை. நம்மை மனம் மாறுவதற்கு அவர் அழைக்கும்போது கூட அவர் கனிவு தெரிகின்றது என்றும், கிறிஸ்தவர்களாகிய நமக்கு அவர் எப்போதும் காத்திருக்கும் ஒரு தந்தையாக உள்ளார் என்றும் உரைத்த திருத்தந்தை, காணாமல் போன மகன் உவமை பற்றியும் குறிப்பிட்டார். நான் நிறைய பாவங்கள் செய்துள்ளேன்; எனவே கடவுள் மகிழ்வார எனத் தெரியாது என்று யாரும் சொன்னால் அவரிடம் சென்று முயற்சி செய்யலாம், ஏனெனில் அவர் அன்புடன் எப்போதும் நம்மை வரவேற்கிறார் எனவும் கூறினார்.

நன்றி. நம்வாழ்வு



# மறைமாவட்ட செய்திகள்

4.4.14 அன்று மாலை அடைக்கலாபுரம் புனித வளனார் கருணை இல்ல நிர்வாகக்குழு கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

5.4.14 அன்று மறைமாவட்ட பங்குபேரவை நிர்வாகிகள் கூட்டம் தூத்துக்குடி நற்செய்தி நடுவத்தில் வைத்து மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

6.4.14 அன்று காலை குருமாணவர்களுக்கான திருப்பலியும் அன்று மாலை தூத்துக்குடி பனிமயமாதா திருத்தலத்தில் தவக்கால திரியாத்திரை மற்றும் திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

10.4.14 அன்று காலை மறைமாவட்ட கல்விக்குழு கூட்டமும், அன்று மாலை மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர்களின் கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

11.4.14 அன்று மாலை மறைமாவட்ட கதிட்ரல் ஆலய வளாகத்தில் மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் நற்செய்தி விழா நடைபெற்றது.

12.4.14 அன்று காலை சிறுமலர் குருமடத்தில் திருப்பலியும் அன்று மாலை மறைமாவட்ட கதிட்ரல் ஆலய வளாகத்தில் நற்செய்தி விழாவும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது .

13.4.14 அன்று காலை குருத்தோலை ஞாயிறு திருப்பலியும் அன்று மாலை மறைமாவட்ட கதிட்ரல் ஆலய வளாகத்தில் நற்செய்தி விழாவும் , மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

15.4.14 அன்று தூத்துக்குடியில் வைத்து குருக்களுக்கான தவக்கால புனித எண்ணை மந்திரிப்பு திருப்பலி மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.

16.4.14 முதல் 19.4.14 முடிய புனித வார வழிபாடுகள் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

20.4.14 அன்று உயிர்ப்பு பெருவிழா திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது .

22,23.4.14 ஆகிய இரு நாட்களிலும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் தூத்துக்குடி நற்செய்தி நடுவத்தில் வைத்து குருக்களுக்கான ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

24.4.14 அன்று மாலை ஆயர் இல்லத்தில் வைத்து லூசியா நிறுவன நிர்வாகக்குழுகூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது .

25.4.14 அன்று மாலை மறைமாவட்ட நிதிக்குழு கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது .

26.4.14 அன்று காலை தொழுநோயாளர் இல்லத்தில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

27.4.14 அன்று காலை மங்களகிரி டிவைன் மெர்சி தியான இல்லத்தில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

28.4.14 அன்று மாலை அழகப்புரத்தில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் குருத்துவ வெள்ளி விழா திருப்பலி நடைபெற்றது.

29.4.14 அன்று காலை பணகுடியில் கட்டப்பட்டுள்ள அருட்சகோதரிகளின் புதிய இல்லதிறப்பு விழா திருப்பலியும், அன்று மாலை நாகலாபுரம் பங்கு குருவப்பட்டி ஆலயத்தில் வைத்து பங்கு வெள்ளி விழா திருப்பலியும் மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது .

30.4.14 அன்று காலை வடக்கன்குளத்தில் அருட்சகோதரிகளின் வார்த்தைப்பாடு திருப்பலி மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.

நன்றி–மறைமாவட்ட செய்திகள்

# பங்குசெய்திகள்



- ✶ 01.04.14 அன்று மாலை நமது ஊர் புனித அந்தோணியார் கெபியில் திருப்பலி நடைபெற்றது.
- ✶ 04.04.14 அன்று மாலை நமது திருத்தல வளாகத்தில் சிலுவைப்பாதை வழிபாடுகள் நடைபெற்றன. சிலுவைப்பாதை வழிபாட்டினை புனித வின்சென்ட் தே பவுல் சபையினர் சிறப்பித்தனர்
- ✶ 05.04.14 அன்று முதல் சனி வழிபாடுகள் மிக சிறப்பாக நடைபெற்றன..
- ✶ 06.04.14 அன்று அதிகாலை திரியாத்திரையாக வந்த மக்களுக்காக ஞாயிறு திருப்பலியும், அதன்பின் வழக்கமாக உள்ள ஞாயிறு திருப்பலியும் நடைபெற்றது.அன்று காலை 11.00 மணியளவில் பங்குத்தந்தை தலைமையில் பங்குப்பேரவை கூட்டம் நடைபெற்றது. காலை திருப்பலி முடிந்தவுடன் இளைஞர்களுக்கு ஞாயிறு மறைக்கல்வி வினாடி வினா போட்டி நடைபெற்றது. மதியம் 2 மணிக்கு ஞாயிறு மறைக்கல்வி மாணவ மாணவியருக்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. மதியம் 3 மணிக்கு திருமணமான பொதுநிலையினருக்கு போட்டிகள் நடைபெற்றன.
- ✶ 09.04.14 அன்று மாலை திருத்தல வளாகத்தில் இருக்கும் அமல உற்பவ மாதா கெபியில் மாலையில் திருப்பலி நடைபெற்றது.
- ✶ 11.04.14 அன்று மாலை நமது திருத்தல வளாகத்தில் சிலுவைப் பாதை வழிபாடுகள் நடை பெற்றன. வழிபாட்டினை திருக்குடும்ப சபையினர் சிறப்பித்தனர்.
- ✶ 12.04.14 அன்று மாலை திருக்கல்யாண அன்னையின் திருத்தலத்தில் நவநாள் திருப்பலி நடைபெற்றது.
- ✶ 13.04.14 குருத்து ஞாயிறு அன்று நமது ஊரின் பாரம்பரிய முறைப்படி தேரோட்ட வீதி வழியாக குருத்தோலை பவனி நடைபெற்றது. அன்று காலை ஞாயிறு மறைக்கல்வி மாணவ மாணவியருக்கு ஆண்டு இறுதித் தேர்வு நடைபெற்றது.
- ✶ 14.04.14 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தவக்கால சிறப்பு தியானம் நடைபெற்றது. பல்வேறு குழுக்களாக பிரித்து மூன்று குருக்கள் இணைந்து தியானம் நடத்தினார்கள். மாலை 4.00 மணிக்கு ஒப்புரவு அருட்சாதன வழிபாடு நடைபெற்றது. தியானத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.
- ✶ 17.04.14 அன்று மாலை பெரிய வியாழன் வழிபாட்டு திருப்பலி ஆலய மண்டபத்தில் வைத்து பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது. நள்ளிரவு 12.00 மணிவரை சிறப்பு நற்கருணை ஆராதனை நடைபெற்றது. அனைத்து

அன்பியத்தினரும் தங்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் நற்கருணை ஆராதனை வழிபாட்டை சிறப்பித்தனர்.

- ✶ 18.04.14 புனித வெள்ளி வழிபாடுகள் மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகி பக்தியுடன் நடைபெற்றது. அதன்பின் தேரோட்ட வீதியில் பெரிய சிலுவைப்பாதை வழிபாடுகள் நடைபெற்றது. வழிபாட்டினை நற்கருணைவீரர் சபையினர் சிறப்பித்தனர்.
- ✶ 19.04.14 அன்று நள்ளிரவு ஈஸ்டர் பெருவிழா திருப்பலி நமது பங்குத்தந்தை தலைமையில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. மக்கள் அனைவரும் பங்குத்தந்தையோடு இணைந்து ஈஸ்டர் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டனர்.
- ✶ 20.04.14 அன்று மாலை நற்கருணை ஆசீருக்குப்பின் மறைக்கல்வி ஆண்டுவிழா கலைநிகழ்ச்சிகள் பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றன.
- ✶ 26.04.14 அன்று மாலை திருக்கல்யாண அன்னையின் திருத்தலத்தில் நவநாள் திருப்பலி நடைபெற்றது.
- ✶ 27.04.14 ஞாயிற்றுக்கிழமை சாத்தான்குளம் மறைவட்ட அளவில் உள்ள இளைஞர் இளம்பெண்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு திருக்கல்யாண மாதா திருத்தலத்தில் வைத்து நடைபெற்றது. நமது பங்கில் உள்ள தென்போஸ்கோ இளைஞர் சபையினரும் அமல உற்பவ மாதா சபை இளம்பெண்களும் பெருமளவில் பங்குகொண்டதோடு மட்டுமின்றி பங்குத்தந்தை தலைமையில் கருத்தரங்கு சிறப்பாக நடைபெற ஏற்பாடுகளை செய்தனர்.

**5.04.2014 அன்று ரஸ்னா வழங்கியோர் :**

| | |
|---|---|
| **S.டைட்டஸ்,** சென்னை வாழ் பொற்பை | 500 |
| **S. பீற்றர்,** சென்னை வாழ் பொற்பை | 500 |
| **M.திலகர்,** சென்னை வாழ் பொற்பை | 500 |
| டென்னிஸ்( எ)குட்டி சென்னை வாழ் பொற்பை | 500 |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | 200 |
| **A.செல்டன்,** கர்நாடகா திருக்கல்யாணி சவுண்ட் | 200 |

**5.04.2014 பொங்கல் வழங்கியோர் :**

| | |
|---|---|
| தேனிட்டஸ் | 2500.00 |
| தேஜஸ்பிரின்ஸ்ஒயிட் | 2500.00 |

**தண்ணீர் 10 மூடை உபயம் :**

S. அருள் செல்வன்

A. இன்ப ராஜ்

S.இனமுத்து (எ) சின்ன தம்பி

ஒருங்கிணைப்பாளர்கள் :

S.**ஜாண்,** A.**இன்பராஜ், சின்ன துரை**

# பங்குப் பேரவை கூட்டம் - 08.04.2014

பொத்தக்காலன்விளை புனித திருக்கல்யாணமாதா திருத்தல பங்கு பேரவை கூட்டம் பங்குத்தந்தை அருட்திரு பபியான் ஜோசப் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் ஆரம்பமானது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஆலய மேற்கூரை பணிக்கான குழுவானது இன்னும் வேகமாக வரிகளை பிரித்து பணிகளை ஆரம்பிக்கக் கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

2. மாதாவிற்கு காணிக்கையாக வரும் புடவைகளை ஏலம் விடுவதை தற்காலிகமாக நிறுத்தி விட்டு அடுத்த ஜீன் (3மாதங்கள்) வரை திருத்தலக்கடையில் வைத்து விற்பனை செய்து வெள்ளோட்டம் பார்க்க தீர்மானிக்கப்பட்டது. இம்முறை வெற்றி பெறாத பட்சத்தில் பழைய முறையான பொது ஏல முறையினையே பின்பற்றவும் தீர்மானிக்கப்பட்டது.

3. முதல் சனி உணவு தயாரிக்கும் செயல்பாட்டை குழுவாக சேர்ந்து செயல்பட தீர்மானிக்கப்பட்டது. முதற்சனி உணவு வரவு செலவு, திருத்தல கடை வரவு செலவு, பாத்திர செலவு போன்றவற்றை முதற்சனிக்கு அடுத்த நாள் ஞாயிறு பங்குப்பேரவை கூட்டத்தில் சமர்ப்பித்து பொதுக்கணக்கில் சேர்க்க தீர்மானிக்கப்பட்டது.

4. திருத்தலகடை வரவு செலவு விவரங்களை கவனித்து சமர்பிக்கும் பொறுப்பினை திருமதி.ரெவினியூஸ் ராணி அவர்கள் தலைமையிலும், அவர்களோடு திருமதி எஸ்.ரெஜினாள் மேரி, திருமதி மோரிஸ் அவர்கள் உறுதுணையோடு செயல்பட தீர்மானிக்கப்பட்டது.

5. மாதாவிற்கு காணிக்கையாக வந்துள்ள தங்க நகைகள், அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரே மாலையாக செய்திட தீர்மானிக்கப்பட்டது 11.04.14 புதனன்று பணியினை ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது .

6. திருத்தலகடை பணியாளருக்கு ரூ1000/- (ஆயிரம்) ஊதிய உயர்வு வழங்கி ரூ5000/- மாத ஊதியமாக வழங்கிட தீர்மானிக்கப்பட்டது

7. ஆலய பங்கு நிர்வாகத்திற்குரிய அனைத்து பணிகளையும் செய்ய திரு. அந்தோணி வில்பர்ட் அவர்களை உதவியாளராக 11.04.14 புதனன்று பணி நியமனம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. மாத ஊதியமாக ரூ4000/- (நான்காயிரம்) வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது

8. திருத்தல கடை பணியாளர்க்கு கூடுதலாக பெண் உதவியாளார் ஒருவரையும் நியமனம் செய்ய திர்மானிக்கப்பட்டது ரு 3000/!மாத ஊதியம் வழங்கவும் திர்மானிக்கப்பட்டது.

9. திருத்தல கடையிருப்பு விவரம் மற்றும் ஆலய மேற்கூரை பணிக்கு பிரிக்கப்பட்ட வரிகள் அனைத்தையும் 11.04.14 புதனன்று திரு.ஜேம்ஸ் மற்றும் திரு. ரா.சூசை சேசன்ராஜ் ஆகியோர் பங்கு தந்தையிடம் ஒப்படைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

# நம் தாய் திருச்சபையின் தாய் அன்னை மரியாள்



வணக்கம் என்பது நாம் பிறர் மீது கொண்ட அன்பை, மரியாதையை வெளிப்படுத்தும் அடையாளமாம். அன்னை மரியாளை நாம் தாயாக ஏற்றுக் கொண்டு, நம்மை முக்காலமும் காத்து வரும் அந்த தாய்க்கு , நமது அன்பை மரியாதையை, நன்றியை வெளிப்படுத்த நமக்கு வழங்கப்பட்ட மாதம் வணக்க மாதமாகும். அதிலும் சிறப்பாக அந்த அன்னை செய்யும் அற்புதங்களை உலகிற்கு பறைசாற்றும் வண்ணம் அந்த அன்னை புரியும் அற்புதங்களின் பெயர்களையே அந்த தாய்க்கு இட்டு மகிழ்கின்றோம். உதாரணமாக பொற்பை நகரில் திருமண வரம் புரியும் அன்னை என்பதால் திருக்கல்யாண அன்னை என்றும் வேளாங்கன்னி மாநகரில் ஆரோக்கியம் அருளும் அன்னை என்பதால் ஆரோக்கிய அன்னை என்றும் பெயரிட்டு வணங்கி மகிழ்கின்றோம்.

**நம் தாய் திருச்சபையின் தாய் :**

நம் தாய்திருச்சபை அன்னைக்கு சிறப்பான வணக்கம் செலுத்தும் பொருட்டு மே மாதத்தை வணக்க மாதமாக அங்கீகரித்து அனுசரித்து வருகிறது.திருச்சபையின் வரலாற்று சுவடுகளை புரட்டி பார்க்கும் பொழுது கத்தோலிக்க திருச்சபையின் வாழ்வு, வழிபாடு மற்றும் வளர்ச்சியை பெரிதும் ஊக்குவிக்கும் ஒரு காரணி உண்டென்றால் அது மரியன்னையின் வணக்கமாகும். திருச்சபையின் சோதனைக் காவலில் திருச்சபையை காப்பாற்றியது மரியன்னை பக்தியும், வணக்கமுமாகும். திருச்சபையை பேணி வளர்க்கும் தாயாக, தொடக்க திருச்சபையில் அன்னை மரியாள் ஆற்றிய செயல்பாடுகள் திருச்சபையின் ஏடுகளில் பொன் எழுத்தால் பொறிக்கப் படவேண்டியவை. ஏனெனில் இயேசுவின் விண்ணேற்புக்குப்பின், சிதறடிக்கப்பட்ட சீடர்களை ,திருத்தூதர்களை ஒன்று சேர்க்கும் கருவியாகவும், பேதுரு தலைமையில் இயேசு தொடங்கிய திருச்சபைக்கு முதல் அப்போஸ்தலராகவும் நின்று செயலாற்றுகின்றார் அன்னை மரியாள். அன்று திருச்சபையின் தாயாக நின்று , சிதறடிக்கப்பட்ட சீடர்களை ஒன்று சேர்த்த அன்னை மரியாள் இன்று உலக மக்களை பாவத்திலிருந்து மீட்டு விண்ணகம் சேர்க்கும் கருவியாகவும், நமக்காக தம் அன்பு மகனிடம் என்றும் பரிந்து பேசும் தாயாகவும் நின்று நம்மை காக்கின்றார். அன்னை மரியாளின் இந்த தாய்மை உணர்வையும், மாசற்ற தூய்மை நிலையையும் திருச்சபை அனுசரித்து வணங்குகிறது. இதன் காரணமாக திருச்சபையும் அன்னை மரியாளுக்கு இணைமீட்பர் என்ற பட்டம் வழங்கி அன்னை மரியாளை மகிமைப்படுத்துகின்றது. நாம் நடப்பது நம்பிக்கையினால்தான். பார்வையால் அல்ல. ஆகவே கானாவூர் கல்யாண வீட்டின் துன்பத்தை மாற்றிய கல்யாணத்தாய் நம்மை காலம் முழுவதும் கனிந்தே காத்து நிற்பார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த மே மாத வணக்க நாளில் அந்த தாய்க்கு ஆனந்த கானம் பாடி மகிழ்வோம்.

ம. மிக்கேல் உஷா, பொற்பை

# சக்தியுடைத்தவராக இருக்கிற மாதாவே!

உடல் சக்திக்கும் அறிவு சக்திக்கும் மேலாக பாவத்திலிருந்து விடுபட்டு பரமனின் வாழ்வில் பங்கு பெறுவது அருள் சக்தி கடவுளையே நமக்குள்ளும் நம்மையே கடவுளுக்குள்ளும் வாழ வைப்பது அருள்சக்தி. **சாத்தானை எதிர்த்துச்சண்டையிட்டுச்சோதனைகளை முறித்து**கடவுளைச் சொந்தமாக்கிக் கொள்வதுஅருள்சக்தி. நம் அன்னை மரியாவைப் பார்க்கும்போது அவர் அருள்சக்தி கொண்டவராக இருக்கிறார்.எனவே தான் அருள் மிகப்பெற்றவரே வாழ்க என வானதூதர் மரியாவிக்குத்தோன்றி வாழ்த்தினார்.எனவே தான் திருச்சபை அன்னை மரியாவைச் சக்தியுடைத்தவராக இருக்கிற கன்னிகையே என்று கூறிப்புகழ்பாடுகிறது. சக்தியுடையவராக இருக்கும் நம் அன்னையிடம் முன்னோர்கள் கொண்டிருந்த அசையாத நம்பிக்கையும் இறைவாக்கினர்களின் எதிர் நோக்கும் அப்போஸ்தலர்களின் தணியாக தாகமும் வேதசாட்சிகள் உறுதியான உள்ளமும் நீதித்தலைவர்களின் ஞானமும் கன்னியர்களின் தூய்மையும் மறைசாட்சிகளின் மறைஆர்வமும் முழுமையாக குடிக்கொாண்டுள்ளது. .இவற்றையெல்லாம்விட இந்த உலகத்தைப் படைத்த .இறைவனின் தாயாக இருப்பதுதான் அவருடைய சக்திக்கும் வல்லமைக்கும் முக்கிய காரணம்



புனித பொன்வாய் அருளப்பர் அன்னையைப் பற்றிக் கூறும்போது அன்னை மரி சக்தியுடைத்தவராக இருக்கின்றார் ஏனென்றால் மரியா கானாவூர் திருமணத்தில் இயேசுவின் முதல் புதுமை நிகழக் காரணமாய் இருக்கிறார் என்றார். எடுத்துக்காட்டாக இயேசுவின் தாய் பணியாளரிடம் அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள் என்றார்;தூய பீட்டர் தமியான் கூறுவது போல அன்னை மரியா இயேசுவின் தாயாக இருப்பதால் இயேசுவிடம் இருந்து வரங்களை மக்களினத்துக்காகக் கேட்டுப் பெறுகின்ற போது ஒரு பணியாளரைப்போல கேட்பதில்லை மாறாக முழு உரிமையுடன் கேட்கும் சக்தியுடைத்தவராக இருக்கிறார் என்றார்.

அன்னையின் சக்தி நிறைந்த வல்லமையுள்ள புதுமைகளுக்குக் காரணம் அவர் நம்மீது கொண்டுள்ள அன்பும் இரக்கமும் அவரின் தாழ்ச்சியான உள்ளமும்தான் ஆண்டவர் தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். எனவேதான் இரக்கம் நிறைந்த அன்னையே என்றும் சக்தி நிறைந்த சகாயத்தாயே என்றும் பாடி மகிழ்கிறோம் மேலும் இந்த உலகில் எந்த ஒரு தாய்க்கும் இல்லாத சக்தி நம் அன்னையிடம் இருக்கிறது.அது என்னவென்றால் இயேசுவின் பிறப்பு முதல் இறப்பு மற்றும் உயிர்ப்பு வரை மகனின் சிலுவைப்பாடுகளை துன்பங்களை தன் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு தரணிக்காகத் தன் ஒரே மகன் இயேசுவையே கையளித்தது.எனவே நம் சக்தியுடைத்தவராக இருக்கும் அன்னையிடம் இயேசுவின் பலி வழியாக நமக்குக் கிடைக்கும் நற்கருணையிலே ஆன்ம சக்தி பெற அருள் சக்தி பெற செபிப்போம்

**– தாயே எங்கள் தஞ்சமே**

# திருக்கல்யாணத் தாய் திருத்தல முதல்சனி வழிபாடு



# (5.4.2014)

திருக்கல்யாணத்தாய் திருத்தலத்தில் ஏப்ரல் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 5.04 2014 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**ஜெகதீஸ்**அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துகள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு. **ஜெகதீஸ்**அடிகளார், அவர்கள் தலைமையில், பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு. **பிரிட்டோ,** அருட்திரு.**பீட்டர் பால்,** அருட்திரு. **பீட்டர் ராஜா,** அருட்திரு. A.S.**ராஜா,** அருட்திரு.**கிராஸியூஸ்,**அருட்திரு.**சந்திஸ்டர்**, அருட்திரு.**பங்கராஸ்**,அருட்திரு.**ரெத்தினராஜ்**,அருட்திரு.**பபிஸ்டன்** அருட்திரு. **டேவிட் வளன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் தமிழில் அருட்திரு. **ஜெகதீஸ்** அடிகளாரும்,மலையாளத்தில் அருட்திரு.**ஜான்விக்டர்** அடிகளாரும் மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து **150** வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **12500** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதைத் பங்குத்தந்தை **பபியான் ஜோசப்** வழி நடத்தினார்கள். அதன்பின்பு பங்குத்தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்** தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலியும் அதன்பின் சிறப்புமாலை ஆராதனையும் நடைபெற்றது.

**– திருத்தல அதிபர்**

# நன்றிகள் பலகோடிகள் 05.04.2014
# முதல்சனி உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| **F.**தீர்த்தூஸ், நாகர்கோவில் | 300.00 |
| ஆண்டனி ராஜ்,திருச்சி | 100.00 |
| **R.**செல்வராஜ்,பொற்றை | 200.00 |
| மைக்கிள் ராஜ்,பொற்றை | 100.00 |
| **V.** சந்தன சூசை,பொற்றை | 500.00 |
| பரலோகமாதா போட்,,புத்தன்துறை | 430.00 |
| டெய்சி | 100.00 |
| **S.** ரெஜினாள்மேரி ,பொற்றை | 100.00 |
| சிலுவை அந்தோணி கனி ,பொற்றை | 200.00 |
| மரிய ஞானப்பிரகாசம் ,செஞ்சி | 100.00 |
| **D.** ரோஸ் சேவியர் ,சென்னை | 3000.00 |
| ராஜசிங் ,அடையல் | 50.00 |
| மிக்கேல் ராஜ் , பொற்றை | 100.00 |
| **D.** எட்வர்ட் லாரன்ஸ் ,பொற்றை | 300.00 |
| ராஜேந்திரன் ,பொற்றை | 100.00 |
| ஜெபஸ்டின் ரெனிஷா ,மதுரை | 500.00 |
| அந்தோணி ஜெயராஜ்,பொற்றை | 500.00 |
| ஜாண் உஷா | 1100.00 |
| **P.** இமான்சிங்,திக்கணங்கோடு | 6500.00 |
| **S.** ஜஸ்டின் ,கோவை | 2001.00 |
| கார்த்திக்கேயன் ,மூக்கந்தன்விளை | 300.00 |
| அலெக்ஸ் ,பொற்றை | 1000.00 |
| ஜார்ஜ் மோகன் ,திருமூலநகர் | 500.00 |
| **V.** சேவியர் ,சாத்தான்குளம் | 100.00 |
| **G.**ஆல்பின் ,வெள்ளவிளை | 100.00 |
| டேவிட் ஜாண் மோரீஸ்,நாகர்கோவில் | 500.00 |
| லூக்காஸ் மளிகை ,திருப்பூர் | 1000.00 |
| **M.**ஜேசுதாசன் ,இராஜாவூர் | 1000.00 |
| ஜெரின் ஸ்டோர் ,உடன்குடி | 500.00 |
| **A.**ஸிபோரா ,பொற்றை | 2500.00 |
| ஜென்ஸின் ,பொற்றை | 200.00 |
| **S.**ஏசுவடியான் ,பொற்றை | 100.00 |
| வினிஸ் மோனி ,குறும்பனை | 750.00 |
| பிரபு ,நாகர்கோவில் | 1000.00 |
| மத்தியாஸ் ,நாகர்கோவில் | 5000.00 |
| **S.**சுரேஷ் பாண்டியன் ,பொற்றை | 100.00 |
| சே.குணம் ,டக்கர்புரம் | 500.00 |
| **S.**ஏஞ்சலின் ,கவரப்பேட்டை | 1000.00 |
| அமலதாஸ் ,மன்னார்புரம் | 500.00 |
| ரோவுன் தாஸ் ,குளித்துறை | 2001.00 |
| **G.T.M.**அந்தோணி செல்வன் ,சாத்தை | 1000.00 |
| செல்வன் ,பூந்துறை | 5000.00 |
| **S.**ஆல்பர்ட் ,நாசரேத் | 200.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| எட்வின் காமராஜ் டெய்ஸிராணி சாப்பாடு பிளேட் | 10,000 |
| கென்னடி கலா (தூத்துக்குடி) | அரிசி 25 கிலோ |
| அன்னையின் அடிமை | பீடப்பூக்கள் |
| ஹாசன் பஸ் காற்கறி ஏற்றிவந்த வாடகை | நன்கொடையாக |
| சகாயராஜ் ரபீனா , புன்னகாயல் | அரிசி 25 கிலோ |
| பெயர் விரும்பாத நபர் | அரிசி 300 கிலோ |
| பெயர் விரும்பாத நபர் | அரிசி 100 கிலோ |
| M.S.R.ஜஸ்டின், சென்னை | அரிசி 100 கிலோ |
| ஜெரோம் குயின்டீன், கவரப்பேட்டை | அரிசி 100 கிலோ |
| ராஜேஷ் அமலா, பொற்பை | அரிசி 50 கிலோ |
| சூசை மிக்கேல், கோவை | அரிசி 50 கிலோ |
| ஜெரால்டு விஜி, மும்பை | அரிசி 25கிலோ |
| அகஸ்டின் , வாடீயூர் | அரிசி 25 கிலோ |
| அனுஷியா, ஆசாரிப்பள்ளம் | தேங்காய் 12 |
| டால்பின்ஸ், உவரி | அரிசி 25 கிலோ |
| மொர்சன், உவரி | அரிசி 25 கிலோ |
| சாந்தா தாமஸ், இராஜாக்கமங்கலம் துறை | அரிசி 25 கிலோ |
| ராஜ்,இராஜாக்கமங்கலம் துறை | அரிசி 25 கிலோ |

## முதல் சனி செலவு விபரம் 05.04.2014

| | |
|---|---|
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| யோவான் சமையல் | 13,000.00 |
| சேசு ஜெயராஜ் மற்றும் பணியாளர்கள் | 4170.00 |
| பேச்சியம்மாள் தூய்மைபணி | 2500.00 |
| ஜஸ்டின் மின்னல் தண்ணீர் மூடை 84 | 4788.00 |
| ஹென்றி மளிகை | 72066.00 |
| ஜெயக்குமார் டிராக்டர் | 2000.00 |
| வின்சென்ட் உணவு விடுதி | 1144.00 |
| இம்மான் தண்ணீர்லோடு;வண்டி வாடகை | 1550.00 |
| அந்தோணிராஜ் விறகு 38.25 எடை | 5195.00 |
| ஜஸ்டின் சகாயராஜ் உணவு விடுதி | 660.00 |
| | .................. |
| மொத்தம் | 107474.00 |
| | ................... |

## முதல் சனி மதிய உணவு வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| வங்கியில் | 12540.00 |
| கையில் | 133.00 |
| நன்கொடை மூலம் வரவு | 41132.00 |
| ஜோஸ் குடும்பத்தார் வங்கியில் | 3000.00 |
| பங்கு தந்தை மூலம் வரவு | 67000.00 |
| மொத்தம் | 123805.00 |
| செலவு | 107474.00 |
| இருப்பு | 16331.00 |

| | |
|---|---|
| வங்கியில் | 15540.00 |
| கையில் | 791.00 |
| இறுதி மொத்த இருப்பு | 16331.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 28.02.14 அன்று இருப்பு | 347366.00 |
| 01.03.14 முதல் 31.03.14.வரை விற்பனை | 152801.00 |
| மொத்தம் | 500167.00 |
| .01.03.14முதல் 31.03.14 வரை செலவு | 66640.00 |
| மீதி | 433527.00 |
| புதிய திருத்தல கடை கபோர்டு செலவு புதுமை தண்ணீர் பாட்டில் | 300000.00 |
| 31.03.14அன்று இருப்பு | 133527.00 |



### கேட் வே ஆப் இந்தியா

**கேட்வே ஆப் இந்தியா இந்தியருக்கு தனி கவுரவத்தையும், பெருமையையும் தேடித் தந்தது.** 1924ம் ஆண்டு வைஸ்ராய் லார்டு ரீடிங் என்பவரால் திறந்து வைக்கப்பட்ட இந்த கேட்வே ஆப் இந்தியா ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தேசாய் என்ற ஓர் இந்தியரின் மேற்பார்வையில் உருவானது நம் அனைவருக்கும் பெருமையே.

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639 - 261230 , 261330**

**03-04-2014முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 2097 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 2132பேர் |
| சுகப்பிரசவம் | - | 1876 பேர் |
| நற்சுகம்பெற | - | 2450 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 1985 பேர் |
| தேவஅழைத்தல் | - | 1346 பேர் |
| வேலைகிடைக்க | - | 2697 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 2143 பேர் |
| குடும்பசமாதானம் | - | 2710 பேர் |
| குடும்பநலன் | - | 1698 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 1479 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 1860 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 1798பேர் |
| மனஅமைதிக்காக | - | 2041 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 1892 பேர் |
| மனமாற்றமடைய | - | 1760 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 2434 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 1402 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 2524பேர் |
| கடன்தொல்லைதீர | - | 2342 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 1233 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.**
**உங்கள் ஜெப உதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

– பங்குத்தந்தை

# கதரின் மகிமை....

காந்தியடிகள் இந்தியாவுக்கு அறிமுகப்படுத்திய சொல் கதர் உண்மையில் அது ஒரு அரபி மொழி வார்த்தையாகும். முகம்மது அலி என்ற விடுதலைப் போராளி ஒரு முறை தன் தாயார் கையால் நூற்று நெய்த ஒரு துண்டை காந்தியடிகளுக்கு போர்த்தினார். அப்போது இதைக் கதராகப் போர்த்துகிறேன் என்று சொல்லி போர்த்தினார். கதர் என்ற அரபிச் சொல்லுக்கு மரியாதை என்று பொருள். அதைக் கேட்டு தெரிந்து கொண்ட மகாத்மா, சுதேசிய உணர்வுடன் இந்தியர்கள் கைகளால் நூற்று நெய்து பயன்படுத்தும் துணிகளுக்கு கதர் என்று பெயரிட்டார். அதுவே இன்றும் நிலைத்து நிற்கிறது.

–**டே. கீர்த்திகா,** வெள்ளக்கோவில்.




# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

✶ சுகப்பிரசவம் கிடைத்தமைக்கு நன்றி – **சுருதி,** பூந்துறை

✶ வெளிநாட்டில் வேலை கிடைத்தமைக்கு நன்றி – **சுரேஸ்,** திருமுலநகர்

✶ திருமண வரம் கிடைத்தமைக்கு நன்றி – **ஜெமிலா,** அழகப்பபுரம்

✶ அறுவைசிகிச்சையில் சுகம் கிடைத்தமைக்கு நன்றி – **எட்வின் ரிச்சர்டு,** மரியநாடு

✶ மருத்துவ சிகிச்சையில் வெற்றி கிடைத்தமைக்கு நன்றி **ராஜரத்தினம்இக்னேஷியஸ்,** சாத்தான்குளம்

✶ குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி – **சந்தியாகு ரோலிண்டா,** பவானி

✶ நோயிலிருந்து சுகம் கிடைத்தமைக்கு நன்றி! **ஸ்டெல்லா,** நீரோடி

✶ வெளிநாடு சென்றமைக்கு நன்றி – **மதி,** அழகப்பபுரம்

✶ சுகப்பிரசவம் கிடைத்தமைக்கு நன்றி –**அம்பிகா,** அழகப்பபுரம்

✶ வேலை கிடைத்தமைக்கு நன்றி – **ஜெரிஸ்** சாத்தான்குளம்

✶ குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி –**மரிய தியாகு அக்குயினா,** தூத்தூர்

✶ வேலை கிடைத்தமைக்கு நன்றி –**லாரன்ஸ்,** கருங்குளம்

✶ வேலை கிடைத்தமைக்கு நன்றி –**லிபின்ஷி ரவி,** புத்தன்துறை

✶ இறைவன் செய்த நன்மைக்கு நன்றி –**ஆனந்த் ரோஸி,** திருநெல்வேலி

✶ புதிய இல்லத்திற்கான பணம் கிடைத்தமைக்கு நன்றி –**பிரதீவ் சாரா,** மரியநாடு

✶ மூக்கிலிருந்த PIN எவ்வித ஆபத்தில்லாமல் வெளியே வந்தமைக்கு நன்றி– **நிஷா,** மரியநாடு

✶ மாதா செய்த நன்மைக்கு நன்றி– **ஜெஸ்டன் குடும்பம்,** மணப்பாடு

✶ கண் அறுவை சிகிச்சை நன்றாக நடந்தமைக்கு நன்றி–**கில்டா ரோஸ்,** கோவை

✶ வீடு கட்டி முடித்தமைக்கு நன்றி– **ஜென்சன்,** அழகப்புரம்

✶ திருமண வரம் கிடைத்தமைக்கு நன்றி– **சந்தியாகு ராஜரத்தனம்,** பவானி

✶ அறுவை சிகிச்சையின்றி கல்அடைப்பு குணமாணதற்கு நன்றி– **கெய்சர்,** பொற்பை

✶ வேலை கிடைத்தமைக்கு நன்றி– **நிஷாந்தி,** தூத்துக்குடி

**– பங்குதந்தை**



# குருத்துவம்

பழைய ஏற்பாட்டில் குரு என்பவர் பாவம் போக்கும் பலியை நிறைவேற்றுபவர்.குறையேதுமில்லா விலங்கினையோ பறவையையோ எரிபலியாக செலுத்துவம் அதன் இரத்தத்தினை பலிபீடத்தில் தெளித்து தூய்மைபடுத்துவதும் பாவம் போக்கும் பலியின் சடங்காக கருதப்பட்டது தானியங்களையும் நேர்ச்சை பலியாக செலுத்தி பாவம் போக்கினர் வேண்டுதல்களை நிறைவேற்றினர் இவர்கள்தான் குரு என்றும் லேவியர் எனவும் பழைய ஏற்பாடு காலத்தில் அழைக்கப்பட்டனர் இதுவே புதிய ஏற்பாடு காலத்தில் பொது குருத்துவமாக கருதப்படுகறது;

ஏனெனில் தனிக்குருத்துவம் என்பது பாவம் போக்கும் பலியாக என்றென்றும் நித்திய குருவாகிய கிறிஸ்துவே பரிசுத்தமான தன்னையே பலியாக இரத்தம் சிந்தி சிலுவையில் கையளித்து ஏற்படுத்தியதுதான் தனிக்குருத்துவம் இந்தப்பாவம் போக்கும் பலியினை கல்வாரிப்பலியின் நினைவாக நிறைவேற்றவே கடைசி இராவுணவின் போது தன் உடலையும் இரத்தத்தையும் கையளிப்பதின் நினைவுப்பலியாக தனிக்குருத்துவத்தை ஏற்படுத்தினார்

குரு என்றால் பழைய ஏற்பாட்டின்படி ஆண்டவர் பக்கம் உறுதியாய் இருப்போர், தங்களை அர்ப்பணம் செய்து கொண்டவர்கள் ஆண்டவரால் அருட்பொழிவு செய்யப்பட்டவர்கள் என பொருள்படும்.இயேசு தம்மோடு இருக்கவும் நற்செய்தியை பறைசாற்ற அனுப்பப்படவும் பேய்களை ஓட்ட அதிகாரம் கொண்டிருக்கவும் அவர் பன்னிருவரை நியமித்தார் இதுவே பொதுக்குருத்துவமாக புதிய ஏற்பாட்டு காலத்தில் நடைபெறுகிறது.

இன்றும் நம்மிடையே பலர் பொதுக்குருத்துவத்தில் ஈடுபட்டு முழு நேர, பகுதி நேர .இறை பணியாளராக செயல்படுவதை காண்கிறோம்.

பொதுக்குருத்துவத்தையும் தனிக்குருத்துவத்தையும் புரிந்துகொண்ட நாம் தனிக்குருத்துவத்தின் சிறப்பினை புரிந்துகொள்ள வேண்டும் கல்வாரிப் பலியின் நினைவுப்பலியை நிறைவேற்றவும் பாவம் போக்கும் சடங்கினை (ஒப்பரவு அருட்சாதனம்)நிறைவேற்றவும் தனிக்குருத்துவத்திற்கு மட்டுமே அனுமதி உண்டு.

எனவே தான் அதற்கு தனிச்சிறப்பு மரியாதை, மகத்துவம், மேன்மை எல்லாம் இறைவாக்கினர்கள் திருத்தூதர்கள் குருக்கள் இறைபணியாளர்கள் அனைவருமே நற்செய்தி பணியாற்றுபவர்கள்தான். ஆனால் அனைவரிலும் மேன்மை பெற்றவர்கள்,குருக்கள் இறையடியார்கள் இவர்களை மேன்மைப்படுத்தும்போது என்ன பலன் கிடைக்கும் என்பதை அரசர் ஆகமத்தில் எலியா இறைவாக்கினருக்கு உதவி செய்த கைம்பெண்ணிற்கு கிடைத்த பேருதவியை வாசித்திருப்போம் எனவேதான் நம் திருச்சபையிலும் ஒரு கட்டளையாக நம் ஞான மேய்ப்பர்களுக்கு நம்மாலான உதவியை செய்வது என ஒரு கட்டளை உண்டு.

## மார்ச் 2014 – வரவு செலவு விபரம்

**வரவுகள் :**

| | | |
|---|---|---|
| முன்னிருப்பு வங்கியில் 5,36,594<br>கையில் 3,806 | 540400.00 | |
| திருப்பலி முதல் சனி (175 x 70 = 12,250)<br>பங்கு இல்லம் (50 x 70 = 12,250) | 15750.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை 10,335<br>நவ முதலூர் 750 | 11085.00 | |
| இதர நன்கொடைகள் | 25270.00 | |
| காலண்டர் விற்பனை | 250.00 | |
| அடக்கம்&கல்லறை | 650.00 | |
| திருமண அறிக்கை | 450.00 | |
| ஆலய உண்டியல் மூலம் | 93960.00 | |
| திருவிழா வரிகள் மூலம் | 89665.00 | |
| முதல் சனி கடைகள் மூலம் | 6835.00 | |
| காணிக்கை பொருட்கள் ஏலம் | 31465.00 | |
| பள்ளிகள் மூலம் | 4996.00 | |
| மண்டப நன்கொடை | 2000.00 | |
| திருப்பயணங்கள் மூலம் வரவு | 4780.00 | |
| உபதேசியார் மூலம் ஏல வரவு | 3619.00 | |
| வங்கி வட்டி வரவு | 4412.00 | |
| திருத்தல கடை மூலம் வரவு | 100000.00 | |
| மொத்தம் | 935587.00 | |

**செலவுகள் :**

| | |
|---|---|
| முதல் சனி குருக்கள் படி | 10000.00 |
| முதல் சனி விளம்பர தொடர்பு எலிசபெத் &கிரிஜா | 800.00 |
| பள்ளி வேலைகளுக்கு ஆசாரியார் கூலி | 2890.00 |
| டோபி | 800.00 |
| கோவில் உண்டியல் பூட்டு சரிசெய்ய முன்பணம் | 2000.00 |
| மாணவர்கள் சிற்றுண்டி | 386.00 |
| கோவில் மைக்வயர் &சரி செய்ய கூலி | 1866.00 |

| | |
|---|---|
| அரசாங்க சேவை வரி செலுத்தியது | 7899.00 |
| நம் வாழ்வு சந்தா | 6000.00 |
| பள்ளி செப்டிங் டேங்க் வேலைகளுக்கு | 61000.00 |
| பிளக்ஸ்போர்டு வரி/நன்கொடைரசீது | 6020.00 |
| பாலர்சபை காணிக்கை மறைமாவட்டம் | 2280.00 |
| விண்ணப்ப படிவம் அச்சடிக்க | 1500.00 |
| செய்தித்தாள் ஜனவரி பிப்ரவரி | 310.00 |
| மேக் டி.வி விளம்பரம் | 4000.00 |
| திருவிழா பல்லக்கு | 1500.00 |
| ஆலய பந்தல் போல் பெயிண்டிங் வகைக்கு | 3400.00 |
| கள்ளிகுளம் செல்ல இரண்டு மினி பேருந்து செலவு | 4300.00 |
| டியூப் மற்றும் சோக்கு | 900.00 |
| விண்ணப்பபடிவங்கள் | 7800.00 |
| துப்புரவு பணியாளர்சிறப்பு வேலைக்கு | 220.00 |
| கள்ளிகுளம் செல்ல டிரக்கர் | 1200.00 |
| பள்ளியில் செப்டிங் டேங்க் பைப் வேலைகளுக்கு | 7948.00 |
| எரிவாயு | 450.00 |
| தொடக்கப்பள்ளிகள் சான்றிதழ்கள் வாங்க முன்பணம் | 5000.00 |
| பீற்றர் ராஜ் டிரக்கர் வாடகை | 1500.00 |
| செபஸ்தியார் மேடை மரம் பந்தல் அவிழ்க்க கூலி | 2000.00 |
| பத்திரிக்கை போட்டோ எடுக்க | 300.00 |
| நொச்சிகுளம் மாணவர்கள் சிற்றுண்டி | 470.00 |
| புதிய மெயின் அமைத்து டியூப் வேலைகளுக்கு | 3360.00 |
| திருப்பயணிகள் டிபன் செலவுகள் | 1327.00 |
| மணல் மாதா கோவில் திருப்பயண பேருந்து கட்டணம் | 3000.00 |
| ஆலயத்திற்கு பல்புகள் வாங்கியது | 2284.00 |
| பாஸ்கா மெழுகுதிரி | 1850.00 |
| டிரக்கர் வாடகை இருமுறை | 1000.00 |
| புதிய திருத்தல கடை மரம்& பொருட்கள் | 250000.00 |
| கோயில் ஆம்ப்ளிபயர் சரி செய்ய | 1300.00 |
| முதல் சனி சிக்கன் | 300.00 |
| பினாயில் &பொருட்கள் | 434.00 |
| சாம்பிராணி&பூட்டு | 402.00 |
| பால்& தண்ணீர் | 1290.00 |
| செக்போஸ்ட் | 55.00 |
| மளிகை பொருட்கள் | 2817.00 |
| மார்ச் 2014 செய்தித்தாள் | 160.00 |
| காய்கறி | 293.00 |
| அமிர்தம் டிரஸ்ட் நன்கொடை | 500.00 |
| பழங்கள் | 1670.00 |
| மருத்துவமனைக்கு செல்ல வண்டி வாடகை &கட்டணம் | 2800.00 |
| டீசல் ஜெனரேட்டர் &வாகனம் | 14304.00 |
| மருந்து &மருத்துவர் கட்டணம் | 1941.00 |

| | |
|---|---|
| உதவித் தொகைகள் | 3900.00 |
| ஸ்டேசனரி | 522.00 |
| தொலைபேசி&செல்போன் கட்டணம் | 1482.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஊதியம் | 2000.00 |
| இரவுகாவலர் ஊதியம் | 2500.00 |
| துப்புரவு பணியாளர்கள் ஊதியம் | 7000.00 |
| பங்குத்தந்தை படி | 6000.00 |
| பங்குத்தந்தை திருப்பலி படி | 1500.00 |
| திருத்தல பங்களிப்பு | 10000.00 |
| புனித வரி திருப்பலி<br>அடக்கம்<br>திருப்பலி<br>225 x 5 = 1125<br>1x 7 = 7<br>195 x 50 = 9750 | 10882.00 |
| **மொத்த செலவுகள்** | **488612.00** |

| | |
|---|---|
| **மொத்த வரவு** | **ரூ.9,35,587.00** |
| **மொத்த செலவு** | **ரூ.4,88,612.00** |
| **இறுதியிருப்பு** | **ரூ.446975.00** |

| | |
|---|---|
| **வங்கியில்** | **ரூ.446006.00** |
| **கையில்** | **ரூ.969 .00** |
| **மொத்தம்** | **ரூ.446975.00** |

**– பங்குத்தந்தை**

## வாழ்வில் உயர்ந்தவர்களின் தத்துவம்

அறியாமை வெட்கப்படவேண்டிய ஒன்று. ஆனால் அறிந்துகொள்ள விருப்பமில்லாமை அதைவிட வெட்கப்பட வேண்டிய விஷயமாகும். – பெஞ்சமின் பிராங்ளின்.

எங்கே ஆக்கப்பூர்வ மனநிலையும், தெளிவான குறிக்கோளும் ஒன்று சேருகிறதோ அங்கே வெற்றி தொடங்குகிறது. – ஸ்டோன்

மாணவர்களே வாழ்க்கையில் பின்பு கஷ்டப்படாமல் இருக்க இப்போதே கஷ்டப்படுங்கள். – மரிய ஜோசப்

**–எஸ். ஜெனிபா,** பொற்பை

# 29வது ஆண்டு
# திருமணநாள் வாழ்த்து



## M. ராஜேஸ் - R. அமலா ஜாயிஸ்

**திருமண நாள் : 15-05-1985**

திருக்கல்யாணத்தாயின் அரவணைப்பில் இன்று போல்
என்றும் தொடர்ந்து இறையாசீர் பெற்று
பல்லாண்டு காலம் வாழ...

**வாழ்த்துவோர்**

மகள் – மருமகன் : **A. மார்க்ரெட் சோபியா** M.A.,B.Ed.,
**S. அன்றனி லெனின்** D.M.E.,
**S. ஆனி பெனாசிர் சிந்தியா** (G.N.M- Staff Nurse)
**C.சந்தியாகு மில்ட்டன்**

மகன்கள்: **R. சிம்சன் ராஜா** B.E.,
**R. ஜெபர்ஷன் ராஜா**

பேத்திகள்: **A. ஜெயசாம்னா, A. அட்லின் சாரா**
**S.தன்ஷிகா லிசானியா**

மற்றும்

*உற்றார் உறவினர் & நண்பர்கள்*



# திருக்குடும்பம்

திருச்சபையில் தனி மனிதன் பெறுகின்ற முக்கியத்துவத்தை ஒவ்வொருகுடும்பமும் பெறுகின்றது திருச்சபையிடம் தனி மனிதன் எதிர்பார்ப்பதை கடவுள் ஒவ்வொரு குடும்பத்திலும் எதிர்பார்க்கின்றார் எனவே தான் ஒவ்வொரு குடும்பமும் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கு திருக்குடும்பத்தின் வாழ்வு நமக்கு முன்மாதிரியாக கொடுக்கப்பட்டுள்ளது.எபேசி 3-14:15 விண்ணுலகிலும் மண்ணுலகிலும் உள்ள ஒவ்வொரு குடும்பமும் உண்மையிலேயே திரு குடும்பமாய் விளங்குவதற்குக் காரணமாய் இருக்கிற தந்தையிடம் நான் மண்டியிட்டு வேண்டுகிறேன் என திருத்தூதர் பவுல் கூறுகின்றார். .திருக்குடும்பமானது தந்தையால் தூய ஆவியின் வழிநடத்துதலால் இயக்கப்பட்டது திருக்குடும்பம் மட்டுமல்ல நம்முடைய குடும்பம் கூட தந்தையால் நிர்ணயிக்கப்பட்டது வழிநடத்தப்படுகின்றது வழிநடத்தப்பட வேண்டும்.

இனி நீங்கள் அன்னியர் அல்ல வேற்று நாட்டினரும் அல்ல .இறைமக்கள் சமுதாயத்தின் உடன் குடிமக்கள் கடவுளின் குடும்பத்தைச்சேர்ந்தவர்கள். எபேசி2:19

1.குடும்பம்-கடவுளின் ஆலயம்

1கொரி 3;16 ஒவ்வொரு தனிமனிதனும் கடவுளின் ஆலயம் எபேசி 2-19:22 ஒவ்வொரு குடும்பமும் கடவுளின் ஆலயமாகத் திகழ்கின்றது என திருத்தூதர் பவுல் கூறுகின்றார்.குடும்பம் கடவுளின் ஆலயம் எனில் 1அர. 9:3 சாலமோன் அரசன் ஆலயம் கட்டியபோது அந்த ஆலயத்தில் நிறைவாகத் தங்கியிருக்கும் என கடவுள் வாக்களித்த அன்பு, ஆசீர், மன்னிப்பு இரக்கம் தீர்ப்பு நீதி வழிகாட்டல் அனைத்தும் நமது குடும்பத்திலும் நிறைவாக இருக்கவேண்டும் கடவுளின் ஆலயத்தின் மனிதன் பெறுகின்ற ஒவ்வொரு சமாதானமும் ஆசீரும் ஒவ்வொருவரும் குடும்பத்தின் வழியாகவும் பெறவேண்டும்

2.குடும்பம் - திராட்சைக் கொடி

திருப்பாடல்128 யோவான் 15 தலைவன் பயிரிடுபவன் தலைவி- திராட்சைக்கொடி குழந்தைகள் - கனிகள் குடும்பத்தில் ஒருவர் ஒருவரோடு இணைந்து ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஒருவர் மற்றவரின்

சுமைகளைத் தாங்கிக்கொண்டு விட்டுக் கொடுத்து வாழும் போது குடும்பம் நல்ல கனிகளை ஆவியின் கனிகளை சமுதாயத்திற்கு வழங்கும் திராட்சைசெடியாக திகழ்கிறது;

**3–குடும்பம் உறவின் உயிர்நாடு**

மனித உறவுகளின் அடிப்படை குடும்பத்திலிருந்து தொடங்குகிறது எனவே குடும்பம் உறவின் உயிர் நாடியாகத் திகழ்கிறது.எபி12:15 கசப்பான நச்சு வேர்களாகிய பொறாமை, பகை, பொருளாசை போன்றவை குடும்பத்தில் வேரூன்றும் போது குடும்பத்தின் உறவுநிலை பாதிக்கப்படுகின்றது;

கலாத். 5:13, கலாத்.6:2, கொலோ 3:12–17 1திமொ 6:10, எபேசி3:17. அன்பே நமது குடும்பங்களின் ஆணிவேரும் அடித்தளமுமாய் திகழவேண்டும் அப்போதுதான் உறவுகள் வளரும்

**4. குடும்பம் – குட்டித் திருச்சபை**

எபேசி 5:21–33 திருச்சபைக்கும் இயேசுவுக்கும் உள்ள உறவு குடும்ப உறவு திருச்சபையில் கிறிஸ்து நமக்கு மணவாளனாக இருக்கின்றார் கிறிஸ்துவுக்கும் நமக்கும் உள்ள உறவுபோல குடும்பத்தில் நம் ஒவ்வொருவரின் உறவும் இருக்கவேண்டும் விடுதலை 13:14–15 விடுதலை 16:31–34 திருச்சபையின் மறைபொருட்களை திருவருட்சாதனங்களை புனிதர்களின் வரலாற்றை திருவிவிலியத்தை ஒவ்வொரு குழந்தையும் முதலில் குடும்பத்தில் போதகர்களாக வழிகாட்டிகளாகத் திகழ வேண்டும்.

அன்பு என்னும் நிலத்தில்
இறைவார்த்தையை விதையாக்கி
விசுவாசத்தை வேராக்கி
செபத்தை நீரூற்றாக்கி

நமது குடும்ப வாழ்வை அமைத்துக் கொள்ளும்போது ஆவியின் கனிகளை சமுதாயத்திற்கும் திருச்சபைக்கும் கொடுக்கும் நல்ல குடும்பமாக நமது குடும்பம் திகழும் திருக்குடும்பத்தின் வாழ்வு–மாதிரிகளை நம் குடும்பத்தின் வழிகாட்டியாகக் கொள்வோம்

–**ஹென்றி ஜுலியஸ்**, மதுரை

## ஜன கன மன...

ஜன கன மன பாடல் முதல் முதலாக 1911–ம் ஆண்டு டிசம்பர்27–ல் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் பாடப்பட்டுள்ளது. ஹிந்து பத்திகள் (13 வரிகள்) கொண்ட நம் தேசிய கீதத்தை 52 நொடிக்குள் பாட வேண்டும்.

முதல் கடைசி பத்திகளை மட்டும் கொண்ட தேசிய கீதத்தின் குறுகிய வடிவத்தை பாடுவதற்கான நேரம் 20 நொடிகள்

நம் தேசிய கீதத்தில் இரு நதிகள், இரு மலைகள், ஏழு மாநிலங்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

– **சு. ஜெஸ்வின்**, திசையன்விளை

திருத்தல அறிவிப்பு நாள் : 12.05.2013







## திருத்தல வரலாறு(1935–2013)

பொத்தக்காலன்விளை, திருக்கல்யாண மாதா திருத்தலம், அனைத்து மக்களையும் ஈர்க்கும் ஓர் ஒளிரும் தலமாக தூத்துக்குடி மறைமாவட்டம், சாத்தான்குளம் மறைவட்டத்தில்அமைந்துள்ளது.

**ஊர்பெயர்வரக்காரணம்:–**

ஊரைக் கட்டிக்காப்பவர்களுக்கு முக்கந்தர் என்ற பெயர் இருந்தது. கிராமங்களில் முக்கந்தர்களுக்குத்தான் முதல் மதிப்பு. 1450 ஆண்டளவில் முக்கந்தராக இருந்த ஒருவர் வலிமை மிக்கவராகவும், துணிச்சலானவராகவும் இருந்திருக்கிறார். இவர் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். எனவே இக்குடியிருப்புக்கு வெளியே உள்ள மக்கள் முக்கந்தரை பொத்தக்காலன் என்று அழைத்து பின்னர் இக்குடியிருப்பை பொத்தக்காலன்விளை என்று அழைத்திருக்கிறார்கள். அப்பெயரே இன்று வரை நிலைத்து பொத்தக்காலன்விளை என்றுஅழைக்கப்படுகிறது.

**பிரான்ஸ்நாட்டில்மாதாவுக்குசிறப்புபக்தி:–**

பல ஆண்டுகளாக அன்னை மரியா மீது ஆழ்ந்த பற்று கொண்ட பிரான்ஸ் நாட்டு மக்களால் அன்னை மரியாவின் கல்யாண நிச்சயதார்த்தம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. ஆண்டு தோறும் ஜனவரி 23ம் தேதி இவ்விழாவைக் கொண்டாடினார்கள். இவர்களது இந்த பக்தி முயற்சியை திருத்தந்தை மூன்றாம் சின்னப்பர் 1546ம் ஆண்டு அங்கீகரித்தார். அதனைத் தொடர்ந்து ஆரஸ் முறைப்படி 1556ம் ஆண்டு முதல் உலகெங்கும் ஜனவரி 23ம் தேதியை மாதாவின் கல்யாண நிச்சயதார்த்தம் என்று கொண்டாடினார்கள்.

**திருக்கல்யாணமாதாஆலயம்:–**

திருக்கல்யாணமாதாவைவழிபடஓரிடத்தைஒதுக்கிவைத்திருந்தனர். அஃது ஓர்ஓலைகுடிசைமழைக்காலங்களில்பெருவெள்ளம்ஏற்படும்போதுவீடுகளும்செப குடிசையும் பெரிதும் பாதிக்கப்படுபவையாக இருந்தன. ஆண்டு தோறும் வெள்ளத்தால் அழிவதால் மீண்டும் மீண்டும் புதுப்பிப்பது கடினமாக இருந்தது. எனவே ஒரு கிணறு வெட்டி அதில் கிடைத்த கற்களைக் கொண்டும், கடற்கற்களைக் கொண்டும் ஒரு கட்டிடத்தை நிறுவ தீர்மானித்தனர். அவ்விதம் தான் 1623ம் ஆண்டு மூன்று பக்கங்களில் சுவர் வைத்து ஓர் அறையைக் கட்டினார்கள். யாரும் எப்போதும் உள்ளேவந்துசெபிக்க வசதியாகக் கட்டப்பட்டது.

**திருக்கல்யாண மாதா பெயரால் உலகில் ஒரே ஒரு ஆலயம் :–**

மரியாவுக்கும் சூசையப்பருக்கும் ஏற்பட்ட திருமண நிச்சயதார்த்த நினைவாக 1835ல் திருக்கல்யாணமாதா ஆலயம் ஒன்று கட்டி அன்னையின் புகழ்பாடினர். பின்னர் 1971ல் தற்போதுள்ள புதிய திருக்கல்யாண மாதா ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது. அன்று முதல் இன்றுவரை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 14ம் தேதி கொடியேற்றி அன்னைமரியாளின் திருவிழா அன்னையின் திருமண ஒப்பந்த நாளாகிய ஜனவரி 23ம் தேதி திருவிழாவை சிறப்புற கொண்டாடி மகிழ்கிறார்கள். தமிழ் பண்பாட்டிலே வெற்றிலை பாக்கு என்பது மங்களகரமான நிகழ்வுகளின் போது பரிமாறப்படும் ஓர் அற்புத பொருள். எனவே திருவிழா கொடியேற்றத்திற்குப்பின் அனைவருக்கும் வெற்றிலை பாக்கு வழங்கப்படும்.

**திருக்கல்யாண அன்னையின் திருவிழா அறிக்கை :–**

பொத்தக்காலன்விளையைப் பொறுத்தமட்டில் திருக்கல்யாண மாதா திருவிழா அறிக்கை வாசிப்பது சற்று வித்தியாசமானது. இது திருமண அறிக்கை வாசிப்பது போன்று வாசிக்கப் படும்.மூவொரு இறைவன் திருவருளால் நமது ஊர்ப் பொத்தக் காலன்விளையில் குடிகொண்டிருக்கும் தாவீதின் குலத் தவரான தந்தை யாக்கோபு தாய் லிதியாள் இவர்களின் திருநிறைச்செல்வன் சூசை யப்பருக்கும் மேற்படி இடத்திலே குடி கொண்டிருக்கும் தாவீது இராஜ குலத்தில் உதித்த தந்தை சுவக்கீன், தாய் அன்னம்மாள் இவர்களின் அருந்தவப் புதல்வியான மரியாளுக்கும் ஜனவரி 23ம் தேதி திருமணம் நிச்சயிக்கப்பட்டதன் நினைவாக நிகழும் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் நாள் மாலை 6மணிக்கு புனித மிக்கேல் அதிதூதரின் திருவுருவ சப்பரப்பவனியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் பக்த கோடிகள் சூழ்ந்து நிற்க மேள வாத்தியங்கள் முழங்க வாண வேடிக்கைகள் அதிர பாடகர்கள் பண்ணிசைக்க ஆலய மணிகள் ஒலிக்க கொடியேற்றம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து "ஒன்பது நாட்கள் நவநாள்வழிபாடுகளும் திருக்கல்யாண மாதா நிச்சயதார்த்த தினமாகிய 23-ம் தேதி ஆடம்பரத் திருப்பலியும் நடைபெறும் என்று பறை சாற்றப்படுகிறது" என்று வாசிக்கப்படும்.

**மக்களின் தொழில் :–**

பனைத்தொழிலே மக்களின் முதன்மையான தொழிலாக இருந்து வந்துள்ளமையால் பனைத்தொழிலை மேற்கொள்வதற்கு முன்னராக ஆலயம் தொழுது தங்களுக்குள் உறவை வளர்க்கவும், பனை ஏறுவதற்காக காடுகளுக்குள் செல்வதால் எந்தவித பொல்லாப்புகளும், விலங்குகளால், விபத்துகளும் ஏற்படாமல், மீண்டும் நலமாக மக்கள் நடுவே வந்தடைய இறையருள் வேண்டி திருவிழாவைக் கொண்டாடினார்கள்.

**புளியம்பட்டி அந்தோணியார் கோவில் :–**

குடும்பச்சூழலில் தொம்மை அந்தோணி நாடாருக்கு ஊரைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது. கடவுளின் வழிநடத்துதலிலே நம்பிக்கை கொண்ட அவர் இறுதியிலே புளியம்பட்டி வந்து சேர்ந்தார். அங்கு சிலருடைய அரவணைப்பு கிடைத்தது. இதற்கு நன்றியாகவும், புதிதாகக் குடியேறியுள்ள இடத்தில் தன்னையும் தன்னை அரவணைக்கிற அனைவரையும் எந்தவித தீங்குகளும் நேரிடாமல் அரவணைத்து இறைவன் காத்தருள வேண்டுமென்று குடிசை ஆலயம் ஒன்றை

நிறுவினார் அதுவே இன்றைய அந்தோணியார் திருத்தலம் உருவாகுவதற்கு அடிக்கல் என்று வரலாறு கூறுகிறது. இந்நிகழ்வு 17ம் நூற்றாண்டில் நடைபெற்றுள்ளது.

திருக்கல்யாண மாதா :-

அருட்தந்தை மஸ்கிரனாஸ் பொத்தக்காலன்விளையில் பங்குத் தந்தையாக 1949ல் பொறுப்பேற்றதும் தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு திபூர்சியஸ் ரோச் அவர்களிடம் திருக்கல்யாண மாதா கோயில் பற்றி கூறி ஆயரின் அனுமதியுடன் " பொத்தக்காலன்விளையில் அமைந்துள்ள நமது ஆலயம் திருக்கல்யாண மாதா ஆலயம்" என்று மக்களுக்கு அறிவித்தார். தந்தை நவமணி அடிகளார் காலத்தில் இன்னும் திருக்கல்யாணத்தாயின் புகழ் ஓங்கச்செய்தார். எனவே தான் பல இடங்களிலிருந்தும் திருமண வரம் வேண்டியும், குழந்தைபாக்கியம் வேண்டியும் மக்கள் கல்யாண அன்னையின் வளாகத்தில் குவிந்து கொண்டிருக்கின்றனர்.

சப்பரங்களும் சப்பரப்பறையும் :-

பண்டைய காலத்தில் இருந்தே சப்பரங்கள் எடுப்பது வழக்கமாக இருந்தது. திருக்கல்யாண மாதா ஆலயத்திலும் சப்பரங்கள், சிலுவைத் தட்டோடு மிக்கேல்சம்மனசுக்கு, ஞானப்பிரகாசியருக்கு, இஞ்ஞாசியாருக்கு ஆரோக்கிய நாதருக்கு, செபஸ்தியாருக்கு, அந்தோணியாருக்கு, சவேரியாருக்கு, தோமையாருக்கு, சூசையப்பருக்கு, மாதாவுக்கு என்று இருந்தன.

மாதாவுக்கு புதிய ஆலயம் கட்டப்பட்டதும் பழைய ஆலயத்தினுள் தேரை பாதுகாப்பாக வைக்க முயன்றனர் ஆனால் தேரின் உயரம் 50 அடியாக இருந்ததால் 40 அடியாக குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே தேரில் உள்ள இரண்டு தட்டுகளை அகற்றிவிட்டு உயரத்தை குறைவாக்கி ஆலயத்திலேயே பாதுகாப்பாக தேர் சப்பரத்தை வைத்துக் கொண்டார்கள். காலப்போக்கில் அவற்றில் பல குறைக்கப்பட்டன.

தேர் சப்பரம் பழுதடைந்த நிலையில் இருந்தமையால் 1984ம் ஆண்டில் தந்தை லூர்துமணியின் முயற்சியால் மாதாவிற்கு 40 அடி உயரமுள்ள அலங்காரத் தேர் உருவாக்கப்பட்டது. 2008ல் அழகியதோர் சப்பரப்பறையைக் கட்டுவித்தனர்.

செபஸ்தியார் நாடகம்:-

திருக்கல்யாண மாதா திருவிழா நிறைவு பெற்ற மறுநாள் ஜனவரி 24ம் தேதியிலி ருந்து மூன்று நாட்களுக்கு தொடர்ந்து புனித செபஸ்தியார் நாடகம் கர்நாடக இசை வடிவத்தில் நடைபெறும். நாடகம் நிறைவு பெற்ற பிறகு நள்ளிரவில் பங்கு மக்கள் அனைவரும் "மங்களமேஜெய மங்களமேஎங்கள் மாசில்லா இயேசுவுக்கு மங்களமே" என்ற பாடல் பாட பங்குத்தந்தையை அழைத்துச் சென்று கொடியிறக்க நிகழ்ச்சி நடைபெறும்.

தொகுப்பு

**திருத்தல அறிவிப்பு மலர் குழு**

## பாவிக்கு உயிர் ஈந்தார்

மரியாளாம் நீர்
மனுமகனை திருவயிற்றில் தாங்கி
மறை வாக்கின் படியே இறை
மனு உருவாய் பிறந்தாரே
பெற்றோர் வியக்கும்
பேறு பெற்ற நன்மகனாய்
மறையை போதித்து
மனிதருக்கு தெய்வமானார்
பரிசுத்த ஆவியையும்
பாங்குடனே பெற்று
பன்னிரெண்டு சீடர் ஏற்று
பாவிக்கு உயிர் ஈந்தார்
மூன்றாம் நாளினிலே
முறையாகத் தேடி வந்த
மாதருக்கு காட்சி தந்து
மாட்சியாக விண்ணேற்பு செய்தார்

- **ஜோஸ்பின் மேரி தாசன்**
கவரப்பேட்டை.

## அருட்பெருஞ்செல்வம்!

குழந்தையாம் இயேசுவை
குருசினில் தொங்கிட
குடிலில் ஈன்றெடுத்து
கும்பிடுவோர் மகிழவைத்தாய்

அருட்பெருஞ் செல்வம்
ஐந்து காயமேற்று
சிரசினில் முள்முடி ஏற்று
சிலுவையில் மரித்தனையே

உலகம் மாண்பு பெற
உயிரையே உலகுக் கீந்து
அலகையை ஜெயித்திடவே
ஆர்ப்பரித்த தெய்வம் நீயே

– **சுகிர்தா அன்பரசன்**
கவரப்பேட்டை

# ஒரு வரி உண்மைகள்

1. மின்மினிப்பூச்சிகளில் பெண்பூச்சிகளே அதிக ஒளி தரக்கூடியவை.
2. ஸ்லாத் என்ற விலங்கு தலைகீழாகவும் நடக்கும்.
3. நீல நிறத்தைக் கண்டால் ஈக்களுக்குப் பிடிக்காது.
4. பாம்பின் கண்களுக்கு மேல் இமை கிடையாது.
5. ஒளசல் குருவி நீருக்குள் மூழ்கியே நீந்தும் தன்மையுடையது.
6. வெட்டுக்கிளிகள் நாட்கணக்கில் பறக்கக்கூடியது.
7. வண்ணத்துப் பூச்சி காலினாலேயே ருசி அறிகிறது.
8. வாத்து நீரில் வட்டமடித்துக்கொண்டே இருக்கும்.
9. சிங்கத்தின் ஆயுட்காலம் 15 ஆண்டுகள் தான்.
10. ஈக்கு இரண்டு இறக்கை தேனீக்கு நான்கு.
11. ஒரு தேன் கூட்டில் லட்சம் ஈக்கள் கூட இருக்கும்.
12. நத்தையில் ஆண்,பெண் தனித்தனியே கிடையாது.
13. யானை நடந்து வந்தால் சத்தமே இராது.
14. நீரை உறிஞ்சி குடிக்கும் பறவை புறா ஒன்றுதான்.
15. ஈயின் ஆயுள் பத்து நாள்தான்.

**நன்றி 'ஒரு வரி உண்மைகள்'**

தூயவர்களின் வாழ்க்கை வரலாறு :

# கன்னி மரியாளின் மினவுதல் விழா

இவ்விழாவில் நான்கு நிகழ்ச்சிகளை நாம் கொண்டாடுகிறோம்.

1. கபிரியேல் அதிதூதர் கிறிஸ்துவின் மனித அவதாரத்தை அறிவித்த பின் கன்னிமரியாள் தன் உறவினளான எலிசபெத்தம்மாளைச் சந்திக்க சென்றது.



2. அவளது உதரத்திலிருந்த ஸ்நாபக அருளப்பர் கன்னி மரியாளின் வாழ்த்து மொழிகளைக் கேட்டதும் ஜென்மப் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டது.

3. பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு எலிசபெத்தம்மாள் பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே. என கன்னிமரியாளைப் பாராட்டியது.

4. என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றுகின்றது என்னும் உயரிய பாடலை மரியாள் இசைத்தது.

எலிசபெத்தம்மாள் எருசலேமிலிருந்து மேல் திசையில் ஆறு மைல் தொலைவில் மலை நாட்டில் வசித்து வந்தாள். அவளுக்கு உதவி செய்யும்படி கன்னிமரியாள் சென்றாள். தன்னைவிட தாழ்ந்த ஒரு பெண்ணுக்கு உதவி செய்யபோகிறாள். அவள் கூப்பிடாமலே தானாகச் செல்கிறாள். ஒன்று இரண்டு நாட்களல்ல.மூன்று மாதங்களாக அங்கு தங்கி எல்லா வேலைகளையும் செய்கிறாள். எலிசபெத்தம்மாள் அவளை வாழ்த்தியதும் தன்னைப் பற்றி பெருமை கொள்ளாமல் கடவுளை வாழ்த்துகிறாள் மரியாள். ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தம்மாளோடு தங்கியிருந்த பின் வீடு திரும்பினாள்.

**சிந்தனை :**

கன்னிமரியாள் உண்மையான பிறர் சினேகத்துடன் எலிசபெத்தம்மாளுக்கு உதவி செய்ய சென்றாள். நாம் பிறருக்கு உதவி செய்யாவிட்டாலும், உபத்திரவமாய் இராதபடியாவது பார்த்துக்கொள்ள வேண்டும்.

**செபம் :**

ஆண்டவரே என் அயலாரை என்னைப்போல் நேசிக்கும் வரம் தாரும்.


## இதய அஞ்சலி

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜான் மரிய கிரேஸ் | 6.4.2014 | பொற்பை |
| 2. | அந்தோனி தாசன் | 11.4.2014 | பொற்பை |



# குட்டீஸ் கார்னர்


டியர் குட்டீஸ், கடந்த மாத புதிர் விளையாட்டுகள் பிடித்திருந்தது என்று நிறைய குட்டீஸ்களிடமிருந்து நன்றி மடல்கள் வந்திருந்தது. இந்த வாரமும் அதே போன்று இரண்டு புதிர் விளையாட்டுகள் இடம் பெற்றிருக்கின்றன. முயற்சி செய்யுங்கள்... புதிரை விடுவியுங்கள்...



அருகில் உள்ள படத்தில் இருக்கும் சிறுவனுக்கு புதையல் இருக்கும் இடத்திற்கு செல்வதற்கு தடுமாற்றமாயிருக்கிறதாம். அவனது தடுமாற்றத்தை போக்கி, வாட்டத்தை நீக்கி, புதையலை நோக்கி செல்வதற்கு நீங்கள் கொஞ்சம் பாதைபோட்டு கொடுங்களேன் ப்ளீஸ்.....!?




கீழே உள்ள 6 படங்களில் ஒன்றுமட்டும் மற்ற படங்களிலிருந்து வித்தியாசமானது. அது எந்த படம் என்று உங்களால் கண்டுபிடிக்க முடிந்தால் கண்டுபிடிக்கவும் முடியாதவர்கள் 30 ம் பக்கத்தை புரட்டவும்.




– M.**எல்ரோய் ராயன்,** மும்பை.



# கிச்சன் கார்னர்

## நெத்திலி மீன் குழம்பு



**தேவை :** நெத்திலி மீன்–அரை கிலோ,
சி.வெங்காயம்–150 கிராம்,
தக்காளி – 4,
மிளகாய்தூள் – 1ஸ்பூன்,
தனியாதூள் 2 ஸ்பூன்,
ப.மிளகாய் – 1,
இஞ்சி 1 துண்டு,
பூண்டு – 7பல்,
தேங்காய்பால் – 1டம்ளர்,
வெந்தயம் – 1ஸ்பூன்,
புளி – எலுமிச்சை அளவு,
சோம்பு – 1ஸ்பூன்,
உப்பு மற்றும்
கொத்தமல்லி இலை தேவையான அளவு,


செய்முறை : மீனை சுத்தம் செய்து லேசாக உப்பு, மஞ்சள் தூவி கிளறி 15 நிமிடம் ஊற வைக்கவும். வெங்காயத்தை இரண்டாக நறுக்கவும். தக்காளியை நன்றாக நறுக்கவும். இஞ்சியை விழுதாக அரைத்து எடுத்துக்கொள்ளவும்.

வாணலியில் சிறிது எண்ணை ஊற்றி வெந்தயம், சோம்பு, தாளித்து நறுக்கிய வெங்காயம் பூண்டு இஞ்சி விழுது சேர்த்து நன்றாக வதக்கவும். புளியை கரைத்து ஊற்றவும். இதில் மஞ்சள், மிளகாய், தனியா தூள்களை சேர்த்து எண்ணெய் பிரியும் வரை கொதிக்க விடவும். அடுத்து தேங்காய் பாலை சேர்த்து கொஞ்ச நேரம் கொதிக்கவிட்டு மீனை சேர்க்கவும். மீன் 2 அல்லது 3 கொதியில் வெந்துவிடும். குழம்பை இறக்கும் முன் ஒரு சிறிய வெங்காயத்தை தோலுடன் அதில் தட்டிப்போட்டு அடுப்பில் இருந்து இறக்கவும். கொத்த மல்லி தூவி பரிமாறவும்.

– **ஏஞ்சல் சுவீட்டன்**, திசையன்விளை.

உலகப்புகழ் பெற்றவர்கள் :

# மேரி க்யூரி



இரண்டு முறை நோபல் பரிசு பெற்றவர் என்ற பெருமைக்கு உரிய ஒரே பெண்மணி மேரி க்யூரி ஆகும். போலந்தில் 1867ல் பிறந்து விஞ்ஞானம் படிப்பதற்கு பாரிஸ் வந்த மேரி தனக்கு ஆசிரியராக இருந்த பியரியையே மணந்து கொண்டார். இருவரும் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு ரேடியம் என்ற கதிரியக்கத் தனிமத்தை கண்டுபிடித்தனர். இதற்காக இருவருக்கும் கூட்டாக 1903-ல் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

மூன்றாண்டுகளுக்குப்பிறகு பியரி ஒருவிபத்தில் மரணம் அடைந்தார். அந்த துயரத்தையும் சுமந்து கொண்டு மேரி க்யூரி தொடர்ந்து தன் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டார். அவரது ஆராய்ச்சிப் பணிகளுக்காக 1911-ல் இரண்டாவது முறையாக நோபல் பரிசு இவரைத் தேடிவந்தது. கதிரியக்கப் பொருட்களை ஆராய்ந்து வந்த மேரி அவர்களுக்கு அந்த கதிரியக்கப் பொருட்களினால் உடல் நலம் பாதிக்கப்பட்டு 1934-ல் மறைந்தார்.

புகழ் பெற்ற இந்தியர்கள் :

# அரவிந்தர்

கல்கத்தாவில் 15-8-1872ல் பிறந்த அரவிந்த கோஷ் இங்கிலாந்தில் படித்துப் பட்டம் பெற்றவர். 1907-ல் கல்கத்தா தேசிய கல்லூரியின் தலைவர் ஆனார். வந்தே மாதரம் பத்திரிகையில் அவர் எழுதி வந்த கட்டுரைகள் தேசிய ஆர்வம் வளரப் பெரிதும் உதவின. திலகருடைய தீவிரவாதத்தை ஆதரித்தார். அலிபூர் சிறை வாழ்க்கை அவரது போக்கை மாற்றியது. பெரும்பகுதி நேரத்தைத் தியானம் செய்வதில் செலவிட்டார். அதன் பிறகு அரசியலிலிருந்து விலகி 4-4-1910ல் புதுச்சேரியை அடைந்தார். ஆத்ம விசாரத்தில் அவர் கவனம் சென்றது. தமது கருத்துக்களை விளக்கிப் பல நூல்களை எழுதினார். அரவிந்த ஆசிரமம் அமைந்தது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பலர் அங்கு வந்து தங்கினர். இந்த உலகத்திலேயே விண்ணுலக ஆட்சியை அமைக்க வேண்டும், கலிமாறி சத்திய யுகம் வரவேண்டும், மனித வாழ்வு அமரத் தன்மை பெறவேண்டும், உலகம் பொய், உடல் அநித்யம் என்ற கொள்கை ஒழிய வேண்டும் என்பவை அவருடைய கருத்துக்கள். தம் வழியைப் பின்பற்றும் ஏராளமான பேர்களை உருவாக்கியவர். 4-12-1950ல் இவ்வுலகை விட்டுப் புகழுடம்பு எய்தினார்.



## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்து வலம் :** 1.தெய்வங்கள் (14:11) (திருத்தூதர்பணிகள்) 5. பிலிப்பி (16:12) 9.பேறுடமை (20: 35) 13. புப்பிலிபு 17. உள்ளம் (1: 22) 21. பிள்ளைகள் (8: 16)

**வலமிருந்து இடம் :** 2.மகிழ்ச்சி (14: 17) 6. புகழ்ப்பா (16:25) 10. பிரியா விடை (21:6) 14. இதயம் (28:26) 18. வாக்குறுதியின் (4: 16)22. கொமோராவுக்கு (9 : 29)


**மேலிருந்து கீழ் :** 3.பர்சபா ( 15:22 ) 7. விருப்பம் ( 20:24 ) 11. பிலிப்பு ( 21:8 ) 15. வல்லமை (ரோ 1:16) 19. கட்டளை (7: 9) 23. பிற (11: 13)

**கீழிலிருந்து மேல் :** 4. திமொத்தேயு (16: 1) 8. திட்டம் (20: 27) 12. வாடைக்கொண்டல் (27 : 14) 16. வாழ்வு (ரோமர். 1: 17) 20. வேலை (7 : 13) 24. குறை (15 : 1)

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றிப் பெற்றவர்கள் :

1.D. ஜோஸ்பின் மேரிதாசன், கவரப்பேட்டை
2.W. பெமிலா வில்சன், கவரப்பேட்டை
3.M. அனிதா ஜான்சன், கவரப்பேட்டை
4.D. கலா சகாயம், கவரப்பேட்டை
5.D. பெனிட்டா டோமினிக், கவரப்பேட்டை
6.S. சுரேகீதா, கவரப்பேட்டை
7.S. தினேஸ் எல்ஸி, கவரப்பேட்டை
8.A. அன்ன புஷ்பம் ராஜன்
9.D. சுகிர்தமனி அன்பரசன்,கவரப்பேட்டை
10. A. ஜோஸ்பின் அபிசியா,கவரப்பேட்டை
11. A. அனுஸா அகஸ்டின்,கவரப்பேட்டை
12. A. ஜோசப் அரிஸ்டாட்டில்,கவரப்பேட்டை
13. A. பாக்கியலட்சுமி, கவரப்பேட்டை
14.B. ஸ்டெல்லா பீட்டர், மாதர் பாக்கம்
15.D. லூர்து மேரி தேவசகாயம் ,கவரப்பேட்டை
16.G. ரெஜினாள் மேரி, பொற்பை
17.D. அந்தோணி ஏசுதாசன், பொற்பை
18. S. ஜெயந்திதங்கம், பொற்பை
19.A. தெரஸ்வின் ராஜன் , பொற்பை
20.A. மரிய வர்கீஸ் ஜெனிபர், பொற்பை
21.S. மேரி லீலா, பொற்பை
22. கபரியேல் மேரி , பொற்பை
23. குயின்ரோஸ் பாக்கியம் , பொற்பை
24. ஜோஸ்பின், பொற்பை
25. பிரின்ஸஸ் ஜேம்ஸ்
26.A. கரோலின் சிறுமலர், கொழுந்தட்டு
27.A. பிரான்சிஸ், கொழுந்தட்டு

## 27ம் பக்கத்திற்கான விடைகள் :






# வாழ்வு தரும் வார்த்தைகள் – மே – 2014

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | புனித யோசேப்பு | தி.ப. 5:27-33 | மத். 13:24-58 |
| 2. | புனித அத்தனாசியுஸ் | தி.ப. 5:34-42 | யோவா. 6:1-15 |
| 3. | புனித பிலிப்பு, யாக்கோபு | 1கொரி. 15:1-8 | யோவா. 14:6-14 |
| 4. | பாஸ்கா ஞாயிறு 3 | தி.ப 2:14,22-33 | |
| | | 1பேதுரு 1:17-21 | லூக். 24:13-15 |
| 5. | புனித ஆக்னலோ | தி.ப. 6:8-15 | யோவா. 6:22-29 |
| 6. | புனித தோமினிக் சேவியோ | தி.ப. 7:51-8:1 | யோவா. 6:30-35 |
| 7. | | தி.ப. 8:1-8 | யோவா 6:35-40 |
| 8. | வண. கத்தரீன் | தி.ப. 8:26-40 | யோவா 6:44-51 |
| 9. | வண. நிக்கோலஸ் | தி.ப. 9:1-20 | யோவா 6:52-59 |
| 10. | | தி.ப.9:31-42 | யோவா 6:60-69 |
| 11 | பாஸ்கா ஞாயிறு 4 | தி.ப.2:14,36-41 | |
| | | 1பேதுரு 2:20-25 | லூக்10:1-10 |
| 12 | | தி.ப.11:1-18 | யோவா 10:11-18 |
| 13 | பாத்திமா அன்னை | தி.ப.11:19-26 | யோவா 10:22-30 |
| 14 | புனித மத்தியாஸ் | தி.ப.1:15-17.20-26 | யோவா15:9-17 |
| 15 | புனித இசிதோர் | தி.ப.13:13-25 | யோவா 13:16-20 |
| 16 | புனித உபால்டு | தி.ப.13:26-33 | யோவா14-16 |
| 17 | | தி.ப.13:44-52 | யோவா 14:7-14 |
| 18 | பாஸ்கா ஞாயிறு 5 | தி.ப.6 1-7 | |
| | | 1பேதுரு 2:4-9 | யோவா14:1-12 |
| 19 | புனித பீட்டர் செலஸ்டின் | தி.ப.14:5-18 | யோவா 14:21-26 |
| 20 | புனித பெர்னார்டின் | தி.ப.14:19-28 | யோவா 14:27-31 |
| 21 | புனித கிறிஸ்டோபர் | தி.ப.15;1-6 | யோவா 15:1-8 |
| 22 | புனித ரீட்டா | தி.ப.15:7-21 | யோவா 15:9-11 |
| 23 | | தி.ப.15:22-31 | யோவா 15:12-17 |
| 24 | சகாய அன்னை | தி.ப.16:1-10 | யோவா 15:18-21 |
| 25 | பாஸ்கா ஞாயிறு 6 | தி.ப.8:5-8 14-17 | |
| | | 1பேதுரு 2:4-9 | யோவா 14:1-12 |
| 26 | புனித பில்ப் நேரி | தி.ப.16:11-15 | யோவா 15:26-16:4 |
| 27 | புனித அகஸ்டின் | தி.ப.16:22-34 | யோவா 16:5-11 |
| 28 | புனித ஜெர்மானுஸ் | தி.ப.17:15,22-18:1 | யோவா16:12-15 |
| 29 | புனித சிரில் | தி.ப.18:1-8 | யோவா16:16-20 |
| 30 | புனித ஜோன் | தி.ப.18:9-18 | யோவா 16:20-23 |
| 31 | புனித கன்னிமரியாள் எலிசபெத்தைச் சந்தித்தல் | செப் 3:14-18 | லூக் 1:39-56 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 2 |
| 3 | 5 7 | | | | | | | | 6 11 |
| | | 13 15 | | | | | | ■ | |
| | | | | | 18 | | | | 14 |
| | | | 23 | | | | 19 | | |
| | | | | 12 | 24 | | | | |
| | | | | | 22 | | | | |
| | | 21 | | | | 16 | | | |
| 17 | | | | | | | | 20 | |
| ■ | 8 9 | | | | | | | | 4 10 |

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

பதில்கள் தேடவேண்டிய பகுதி

1.கொரி.அதிகாரம் 1 முதல்
தீத்து அதிகாரம் 1 வரை

விடைகள் வந்து சேரவேண்டிய
கடைசிநாள் : 15.05. 2014

## இடமிருந்து வலம்

1. இயேசு கிறிஸ்துவின் ................பங்கு பெற உங்களை அவர் அழைத்திருக்கிறார்
5. நீங்கள்...........செய்து கொண்டால் அது பாவமல்ல
9. எல்லாம்................அடிபணிய வைக்கும் வரை அவர் ஆட்சி செய்தாக வேண்டும்
13. குறைவாக..............குறைவாக அறுவடை செய்வார்
17. தோழமையும்......................இரக்கமும் கொண்டுள்ளீர்களா?
21. தீமையில்..........காணும் அனைவரும் தீர்ப்புக்கு உள்ளாவர்.

## வலமிருந்து இடம்

2.மீட்பு பெறுகிற நமக்கோ அது கடவுளின்.............
6.உள்ளத்தில் ...............செய்திருந்தால் அவர் செய்வதில் தவறில்லை
10.கடவுளின் வார்த்தை மலிவாகக்.............பலரைப் போன்றவர்கள் அல்ல
14.தூய ஆவியின்.............நாம் வாழ்கிறோம்
18.திமொத்தேயுவின்.............உங்களுக்கு தெரியும்
22.ஏனென்றால்.................முதலாம் உருவாக்கப்பட்டார்

## மேலிருந்து கீழ்

3.யூதர்கள் அரும்.............வேண்டும் என்று கேட்கிறார்கள்
7.நானும் ஒரு.............அல்லவா
11.அறப்பணியைத் தொடங்கிய .................அப்பணியை முடிக்க வேண்டும்
15.தூங்குகிறவனே ..................
19.உயிர்த்தெழுவோருள் அவர் ...........ஆனார்
23.நீ கடவுள்முன் ஏற்புடையோனாக நிற்க............முயற்சி செய்

## கீழிருந்து மேல்

4.நீங்கள் அவர் எழுப்பும்...............
8.பலர் ஓடினாலும்.............பெறுவர் ஒருவரே
12.எல்லோரும்............நிலையில் இருக்கவேண்டும் என்றே சொல்கிறோம்
16.தந்தையரே உங்கள் பிள்ளைகளுக்கு ...............மூட்டாதீர்கள்
20.நீங்கள் தூயோராவதே கடவுளுடைய ..............
24.அவர்களது ..........அடைக்க வேண்டும்

## திருத்தல அறிவிப்பு



solomon Graphics, Tsy. 9788675143